புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# புறநானூற்றில் வள்ளல்களின் ஈகை அறம்

முனைவர். சு.இளமாறன்.,
உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர், கன்னியாகுமரி-629802.

ஆய்வுச் சுருக்கம்

புறநானூறு கடைச்சங்க காலத்துத் தொகுக்கப்பெற்ற நூலாகும். இப்பாடல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் பாடபெற்றன அல்ல புறநானூறு வாழ்க்கையைச் சீர்திருத்தி, நீதியறங்கள் கற்பித்து, இயற்கை நெறியை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையை முழுமைபெற எடுத்துக்கூறுகிறது. அறத்தின் வழி ஆட்சிசெய்வோர் இருக்க வேண்டும் என்பதனை விரும்பி சங்கப் புலவர்கள் ஆட்சியாளருக்கு செவியறிவுறுத்தலைச் செம்மையாகச் செய்தனர். ஈகை என்ற அறம் ஒற்றைப் பரிமாணம் கொண்டதாகச் சங்ககால வாழ்கை முறைகளில் இருக்கவில்லை. வாழ்தல் வேண்டி பொய் கூறாமல் புலவர்கள் நேர்மையாக வாழ்ந்ததைப் புறநானூறு சுட்டுகிறது. பொருளில்லா நிலையிலும் வள்ளன்மை குன்றா மாண்பினை உடையவராக, மன்னர்கள் திகழ்ந்தனர். அதியன், காரி,ஓரி,பேகன்,பாரி,குமணன் ,ஆய் அண்டிரன், நள்ளி ஆகியோரின் மாரியன்ன ஈகையால் இரவலர்கள் மகிழ்நதனர்.முன்பு கொடுத்தோமே அதனால் இல்லை என்ற எண்ணம் இல்லாமல் ஈதலறத்தினை வள்ளல்கள் கடைபிடித்தனர். தமிழர்களின் வீரவாழ்வையும், செம்மையான நெறியையும் எடுத்துக்காட்டுவதாகும். நல்ல செயல்களைச் செய்து,தீய வழியில் செல்லாமல் அறத்தோடு வாழ்வதற்கு புறநானூறு வழிகாட்டுகிறது.

திறவுச் சொற்கள் : அறம் ,வள்ளல்கள் ,ஈகை, ஈதலறம்,அதியன், காரி,ஓரி,பேகன்,பாரி, குமணன் ,ஆய் அண்டிரன், நள்ளி.

## முன்னுரை

சங்கப் பாடல்களில் புறப்பாடல்கள் தனிச்சிறப்பும், தனித்தன்மையும் வாய்ந்தனவாகும்.“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற அமுத மொழியினைப் பேசும் புறநானூறு பழந்தமிழகத்தின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது. வாழ்க்கையை வளம் பெறச் செய்வதற்கும் குறிக்கோளை அடைவதற்கும் ஏற்றாற்போல் உயர்ந்தச் சிந்தனைகளையும் அறக்கருத்துக்களையும் கொண்டு திகழ்கின்றது. இவ்வுலகம் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றது. இவ்வுலகத்தில் உலகத்தில் நாம் வாழக்கற்றுக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்துகிறது. பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்யாமல் இருப்பதே சிறந்த அறமாக இந்நூல் எடுத்துரைக்கிறது.தமிழ் இலக்கியக் கோட்பாடு அறம், பொருள், இன்பம் என்பனவற்றை முதன்னிறுத்துகிறது. இவற்றுள் சங்கப் புலவர்கள் அறத்திற்கே முதன்மை கொடுத்துள்ளனர். மனித வாழ்வின் அனைத்து நிலைப்பாடுகளிலும் அறம் வலியுறுத்தப்பட்டது. அறத்தின் வழி ஆட்சிசெய்வோர் இருக்க வேண்டும் என்பதனை விரும்பி சங்கப் புலவர்கள் ஆட்சியாளருக்கு செவியறிவுறுத்தலைச் செம்மையாகச் செய்தனர். அறத்தினின்று வழுவிய மன்னர்களைச் சங்கப் புலவர்கள் போற்றுவதும் இல்லை. இவ்வறம் ,அரசியல் அறம், போர் அறம், சமுதாய அறம், நட்பு அறம், ஈகை அறம் என்ற பொருண்மைகளில் புறநானூற்றுப் புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இவ்வறங்களில் முதன்மையான அறம் ஈகையறமாகும். மாரியன்ன பண்பினை உடைய வள்ளல்களின் ஈகை அறம் பற்றிய கருத்துகளைப் புறநானூற்றின் வழி இக்கட்டுரை முன்வைக்கிறது.

*காலமும் கருத்துநிலையும்*

*புறநானூறு, தமிழ்நாட்டின் முடியுடைவேந்தர் ,குறுநில மன்னர், கடையெழு வள்ளல், வீரர், புலவர், சேனைத்தலைவர் , அமைச்சர் ஆகியோரின் வரலாற்றுப் பண்புகளை விளக்கி நிற்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அக்கால மக்களின் நடையுடை நாகரிகத்தினையும் தெளிவாக விளக்குகிறது. இந்நூலின் பாடல்களைப் பாடியோர் ஓரே காலத்தவர் அல்லர். "இந்நூலின் செய்யுட்களையெல்லாம் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரெனத் தெரியவில்லை. இச்செய்யுட்களெல்லாம் எம்முறை பற்றித் தொகுக்கப் பட்டன என்பதை உறுதியாக அறிவது மிகவும் இயலாததாயிருக்கிறது"1 ( செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்,பக்.112) இவ்விலக்கியம் புறத்திணை,துறைகளுக்கும் உரிய இலக்கியமாகத் திகழ்கிறது.இவ்விலக்கியத்தில் அரசன் ஒழுக்கம், ஒற்றுமை, அன்பு, அருள், துறவு, வாய்மை, தவம், கற்பு, நட்பு ஆகிய அறங்களும் அவற்றின் பண்புகளும் பொதிந்து கிடக்கின்றன. நாடோறும் உய்ய வழியின்றி வருந்தும் தமிழருக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காய் நிற்கிறது.புறநானூறு கடைச்சங்க காலத்துத் தொகுக்கப்பெற்ற நூலாகும். இப்பாடல்கள் அனைத்தும் ஓரே காலத்தில் பாடபெற்றன அல்ல. பல நூற்றாண்டுகளாகப் பாடப்பெற்ற பாடல்களின் தொகுதியாகும். புறநானூற்றில் பாடப்பெற்றவர்களில் பெரும்பலோர் சேர, சோழ, பாண்டிய மன்னர்களேயாகும். பாரி, காரி, ஆய்அண்டிரன் ஆகிய சிற்றரசர்களும் அந்தணர் சிலரும் புலவராற் புகழப் பெறுகின்றனர். அரசர்கள் தங்கள் கடமைகளைச் சீரும்சிறப்புமாகச் செய்து நாட்டினை வளமடையச் செய்தனர். உயிர்களிடத்தில் அன்பு அக்கறை காட்டி இரக்க உணர்வுடன் வாழ்ந்த்தைப் புறநானூறு அழகாக எடுத்துரைக்கின்றது. "இலக்கியம் சிறந்த அறக்கருத்தை வலியுறுத்த எழுதப்படாவிட்டாலும் சிறந்த அறக்கருத்தையே வலியுறுத்துகிறது"2 ( புறநானூற்றில் அறம் பக்.29)புறநானூற்றுக் கருத்துக்கள் யாவும் தமிழர்களின் வீரவாழ்வையும், செம்மையான நெறியையும் எடுத்துக்காட்டுவதாகும். நல்ல செயல்களைச் செய்து,தீய வழியில் செல்லாமல் அறத்தோடு வாழ்வதற்கு புறநானூறு வழிகாட்டுகிறது.*

*அறம் பற்றிய சிந்தனைகள்*

*அறம் என்ற சொல் அறு என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்தது. இதற்கு அறுத்துச்செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து ஆகிய பொருண்மைகளைத் தருகின்றது. அறம் என்னும் சொல் முறையே வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. மனிதன் அறவழிப்பட்ட வாழ்க்கை வாழ்தலே தனி மனிதனுக்கும், மனித சமுதாயத்திற்கும் நன்மையும், உயர்வும் தரும் என்பதனைக் கருத்தில் கொண்டு வாழவேண்டும்.. மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியின் முழுநிறை வடிவமே அறமாகும். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தன்வினையை அறுத்தெறிவதே அறமாகும்.நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஒழுக்கமே அறமாகக் கருதப்பட்டது. மனிதனின் சிந்திக்கும் ஆற்றலே அறம் பிறப்பதற்கு அடிப்படையாக அமைகிறது. " சங்கப்பாடல்கள் புலவர்மரபு சார்ந்தவை. ஆள்வோரின் முன்பாடப்பட்டவை. அரசர்களை முன்னிலைப்படுத்திய நேரடியான புறப்பாடல்களில் அரசர் தொடர்பாகவும் மறைமுகமான அகப்பாடல்களில் அரசர் உள்ளிட்ட சமூக மாந்தர் தொடர்பாகவும் பல்வேறு வாழ்க்கை அனுபவங்களோடு அறங்கள் பேசப்பட்டன"3 (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும் பக் .48) தாம் சிநதிக்காமல் பிறர் சொல்ல அறியும்அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்துகொள்ளும் அறம் இரண்டாம் தரமானது.இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது.சங்க இலக்கியங்கள் சுட்டும் அறங்கள்இயல்பான முதல தரமான அறங்களாகும். வள்ளல்கள் மட்டுமின்றி புலவர்களும் ஈதலறத்தைக்கடைபிடித்தனர். ஈகை என்ற அறம் ஒற்றைப் பரிமாணம் கொண்டதாகச் சங்ககால வாழ்கை முறைகளில் இருக்கவில்லை. " ஈகை புரிதல் என்பது உடைமை நாகரிகத்தின் தலையான அறமாகியது. ஊணவை உடையவன் இல்லாத இரவலர்க்கு இரங்கி வழங்கும் அறச்செயலாக ஈகை உருவெடுத்தது. பசிபோக்கிய சிற்றரசன் சிறுகுடி பண்ணன் 'பசிப்பிணி மருத்துவன்' என அறத்தகுதியினைப் பெற்றான்"4. (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்,பக்.80)சங்ககாலத்தில் இரத்தல் இழிந்ததாகக் கூறப்பட்டதுடன் ஈகை மிகையாகப் புகழப்பட்டது. அறம் கூறும்*

மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றிய செய்திகளை மதுரைக்காஞ்சி,புறநானூறு முதலான இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன..

புறநானூற்றில் அறம்

இயற்கை நெறிக்காலக் கருத்துக்களைக் கூறும் சங்கப்பாடல்களில் புறநானூறு வாழ்க்கையைச் சீர்திருத்தி, நீதியறங்கள் கற்பித்து, இயற்கை நெறியை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையை முழுமைபெற எடுத்துக்கூறுகிறது.உணவு உள்ளவன் உணவு இல்லாதவனுக்கு இரக்கத்தோடு உணவளித்தல், வழங்குதல், ஈதல் என்ற அறமாக மாற்றம் பெற்றது. இந்த ஈகையறத்தினை, ''தவிரா ஈகை (புறம்.3) தண்டா ஈகை (புறம்.6) ஓம்பா ஈகை ( புறம்.8,24.152) வரையா ஈகை (புறம்.17,43) ஆனா ஈகை (42) கைவள் ஈகை (70,143,168) ஈகை அரிய இழை யணி(புறம்.127) தேற்றா ஈகை(140) மாரி ஈகை (158) மாவள் ஈகை( புறம்.172) உவரா ஈகை(புறம்.201) அளந்து கொடை அறியா ஈகை ( புறம்.229) உள்ளியது சுரக்கும் ஓம்பா ஈகை( புறம்.323) தாங்கா ஈகை ( புறம்.325 ) பொய்யா ஈகை( புறம்.375) ''5( புறநானூறு அகராதி , பக்.42) எனப் புறநானூற்றுப் புலவர்கள் கவிநுட்பமாகப் பாடியுள்ளனர். அறம்செய்வோரும்,அறச்சிந்தனையுடையோரும் பூமியில் வாழ்வதால்தான் இவ்வுலகம் இன்றளவும் நிலைப்பெற்று இருக்கிறது என்பதனை, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி,

''உண்டாலம்ம இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும். இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.'' (புறம்[6] . 182)

என்கிறார்.செல்வத்துப் பயனே ஈதல் (புறம்.189) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் (புறம்.18) ஆகிய எண்ணங்களை மனத்தில் நிலைக்க செய்து உண்மை நெறியிலே நடக்க வேண்டும் என்பதை புறநானூறு நமக்கு எடுத்துரைக்கிறது. சங்ககாலத்தில் மன்னர், மக்கள் அனைவரும் ஈகையறத்தினைக் கடைபிடித்து மக்களுக்கு ஒழுக்க நெறியைப் புகுத்தி நல்வாழ்வு வாழ்ந்தனர்.

புறநானூற்றில் ஈகை அறம்

அறங்களில் தலையாய அறமாக ஈகையினைக் குறிப்பிடுகின்றனர் .சங்கப் புலவர்கள். அது சமூகத்தின் வாழ்வுக்குத் தலையாயதாக விளங்குகின்றது. மேலும் மனிதன் பின்பற்றி நடக்கும் ஒப்புரவுப் பண்பிற்கு அடையாளமாக ஈகைப்பண்பு விளங்குகின்றது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சியாகும்.ஈயாமைஇழிவு,இரப்பவர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிரை விடுவது மேலானது பற்றிய சிந்தனைகள் காலங்காலமாக, தமிழ்மரபில்இருந்தன. பழுமரம் நாடிச் செல்லும் பறவைகளைப்போல, கொடுக்கும் குணமுடைய கொடைஞர்களைத் தேடித் தேடிச் சென்று அவர்களின் புகழினை உலகிற்கு அறிவுறுத்தியுள்ளனர். அவ்வாறு ஈதல் அறத்தைத் திறம்படச் செய்த வள்ளல்களே சங்கப் புறப்பாடல்களில்பெருமைப்படுத்தப்பட்டனர். செல்வம் உடைமை என்பது இன்பமாயத் துய்த்து வாழ்வதற்கே என்பது நடப்பியல் உண்மை. அச்செல்வத்தில் இல்லதாவனுக்குக் கொடுத்துவிட்டுத் துய்த்தல் ' ஈகை' என்ற புகழைத் தருவதாகக் கருதப்பட்டது. ஈகை என்ற அறம் இனக்குழச் சமூகங்களையும் மன்னராட்சி உடைமை சமூகத்திலும் புலவர் , பாணர் ஆகியோருக்குமிடையே வேற்றுமை காணப்பட்டது. பாணர் மரபினர்க்கு வழங்கபட்ட ஈகை என்பது இரப்போர்க்கு உணவு, உடை, குடி, அணிகலன் தருவதாகக் காணப்பட்டது. புலவர்களுக்கு வழங்கப்பட்ட ஈகை என்பது பாடிய பாடல்களின் தரம் அறிந்து அதற்கேற்ப யார் மீது பாடப்பட்டனவோ அவனே நேரில் வந்து இன்முகத்தோடு பாராட்டுப் பரிசினை வழங்கினான்.அரசர்களைப் பாடிய புலவர்கள் எல்லோரும் பரிசு பெறும் நோக்கத்தோடு பாடவில்லை. அறிவுரை கூறுவதற்கவும் பாடியுள்ளர். செல்வம் உடையோர்

இல்லாதார்க்கு வழங்குவதே ஈகையாகும்.வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுகின்ற மனம் கொண்ட மக்கள் வாழ்கின்ற வரையில் அறங்கள் இவ்வுலகத்தில் நிலைபெற்று விளங்கும். ஈதலால் உண்டாகும் புகழே நிலைத்த பேற்றினைத் தருவதாக அமையும் என்னும் கருத்தினை, சோழன் நலங்கிள்ளியை வாழ்த்திப் பாடும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

"திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லாய் ஆயினும் வல்லுநர் ஆயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை ஆகுமதி" (புறம். 27)

என்று குறிப்பிடுகின்றார். நிலையில்லாத செல்வத்தால் பெரும் பயனை அடைவதற்கு முன்னர் அதனைக் கையில் உள்ளபோதே பிறர்க்கு ஈந்து பெருமை தேடிக் கொள்க' என்று அறிவுறுத்துகிறார். மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார், பிறர்க்குக் கொடுத்து உதவும் ஈகைப்பண்பினை,

"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே
அதனால், செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே, தப்புந பலவே," (புறம்.189)

என்று சிறப்பித்து உரைக்கின்றார், வரிசையறிந்து ஈதல் வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.ஈகையறத்தினைப் போற்றாதவன் பண்பினைக் கண்டித்து பொருள் பெறாது சென்றுவிடும் வாழ்க்கையைப் புலவர் பெருமக்கள் கொண்டிருந்தனர். இளவெளிமானை பெருஞ்சித்திரனாரும் அதியமானை ஔவையாரும் இழந்து பாடிய பாடல்கள் உள்ளன. அதே நேரத்தில் வாழ்தல் வேண்டி பொய் கூறாமல் புலவர்கள் நேர்மையாக வாழ்ந்ததைப் புறநானூறு சுட்டுகிறது. ஐயாதிச் சிறுவெண்தேரையார் பாடிய பெருங்காஞ்சித்துறைப் பாடல் 'ஈகையை இடைவிடாது செய்க' என்று அறிவுறுத்துவதனை,

நிலன் கலனாக இலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே" (புறம். 363)

எனும் பாடலில் தாயினும் மிக்க அன்புடையவனாய் இரவலர்க்கு வேண்டுவனக் கொடுத்து புரக்க வேண்டுமெனப் பாடுகிறார். உயிரோடு இருக்கும் காலத்திலேயே பாணனுக்கும் பொன்தாமரையும் பாடினிக்கு மாலையும் தந்து சுற்றம் சூழ வந்த இரவலர்க்கு உணவினை பகிர்ந்துண்டு மகிழ்ந்திருக்க வேண்டுமெனக் வாழ்தலை,

"உண்டும் தின்றும் இரப்போர்க்கு உய்ந்தும்
மகிழ்கம் வம்மோ - மறப் போரேயே !
அரிய ஆகலும் உரிய பெரும
தாழிப் பெருங்காடு எய்திய ஞான்றே" (புறம். 364)

எனும் பாடலில் கூகைக்கோழியார் தெளிவுப்படுத்துகிறார். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் பாடும் போது பாணர் சுற்றத்தின் பசிக்குப் பகைவன் என்னும் பொருளில் 'பைதற் சுற்றத்தின் பசிக்குப் பகையாகி' (புறம்.212) என்று பாடுகிறார். ஈர்ந்தூர் கிழாரினை மதுரைக் குமரனார்

" நிரப்பாது கொடுக்குஞ் செல்வமும் இலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையும் இலனே
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன் (புறம்.180)

எனும் பாடலில் நாள்தோறும் கொடுக்கும் செல்வம் பெற்றவன் அல்லன்.ஆனால் தன்னிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று சொல்லி மறுக்கும் கீழான குணம் கொண்டவன் இல்லை எனப்பாடியுள்ளார். பொருளில்லா நிலையிலும் வள்ளன்மை குன்றா மாண்பினை உடையவராக, மன்னர்கள் திகழ்ந்தனர் என்பதை.

"கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணியசென்ற விரவன் மாக்கள்
களிறோடு நெடுந்தேர் வேண்டினுங் கடவன் (புறம். 313)

எனும் மாங்குடிகிழாரின் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

"வல்லா ராயினும் வல்லுநர் ஆயினும்

*வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி*
*அருள் வல்லை ஆகுமதி அருளிலர் (புறம். 27)*

*எனும் பாடல் சோழன் நலங்கிள்ளியின் ஈதலறத்தினை வெளிக்காட்டுகிறது. வறுமையால் வருத்தம் உற்று வந்தவர்களின் மருங்கை நோக்கி அருள் செய்வதில் வல்லவன் ஆகுக.அருளும் கொடையுமுடையவர் இவ்வுலகினை வெல்வார் என முதுகண்ணன் சாத்தன் என்னும் புலவர் அறிவு பகர்கின்றார்.*

*வள்ளல்களின் ஈகை அறம்*

*கார்முகில் வரக்கண்முடு களித்தாடிய தோகைமயில் குளிரில் நடுங்குவதைக் கண்ட பேகன் உணர்ச்சி மேலோங்கி தான் போர்த்திருந்த ஆடையும் போர்வையும் அம்மயிலுக்குப் போர்த்தினான்.*

*" அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்*
*உறுமிடத்து உதவாது உவர்நிலம் போலக்*
*வரையா மரபின் மாரி போலக்*
*கடாஅ யானைக் கழற்கால் பேகன்*
*கொடைமடம் படுதல் அல்லது*
*படைமடம் படான்பிறர் படைமயக் குறினே" ( புறம்.142)*

*எனும் பாடலில் எவ்விடத்தையும் நீக்காமல் பெய்யும் மழையினைப் போல , பேகன் ஈதலறம் செய்தான் எனப் பரணர் பாடியுள்ளார். முல்லைக் கொடியின் துயர் கண்ட பாரியன் உள்ளத்தில் உருவான இரக்க உணர்வால் தான் ஏறி வந்த தேரினையே அக்கொடிக்கு அளித்தான்.*

*"………… தேருடன்*
*முல்லைக்கு ஈந்த செல்ல நல்லிசை" (புறம். 20)*
*"பாரி பாரி என்று பல ஏந்தி*
*ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்*
*மாரியும் உண்டு ஈண்டு உலகு புரக்கதுவே" (புறம். 107)*

*எனும் பாடலடிகள் பாரியின் புகழினைச் சிறப்பித்துக் கூறுகின்றன.பாரி தன்னை நாடி வருபவர்களுக்கு வேண்டும் அளவிற்குப் பரிசில்களைக் கொடுத்தனுப்புவான்.அறிவில்லாத வரும் புல்லிய குணங்களை உடையவரும் அவனிடம் சென்றால் அவர்களுக்கும் மனமுவந்துப் பரிசில்களை வழங்குவதையே தனது கடமையாகக் கொண்டுள்ளதை,*

*"நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்*
*புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை*
*கடவுள் பேணேம் என்னா ஆங்கு*
*மடவர் மெல்லியர் செல்லினும்*
*கடவன், பாரி கைவண்மையே" (புறம்.106)*

*என்னும் இப்பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது. தன்னை நாடிவரும் விறலியர்களுக்கு வேண்டுமளவிற்கு அணிகலன்களைக் கொடுத்தனுப்பும் ஈகை உள்ளமுடையவனாக வாழ்ந்தான்.சுரபுன்னை மரங்கள் நிறைந்த நெடுவழியிலே சிறியமலர்களையுடைய முல்லைக்கொடி ஒன்று காற்றில் அசைந்தாட, அது பற்றிப் படரக் கொம்பின்றித் தவித்துக் கொண்டிருந்தது என எண்ணி, அது கண்ட பாரி தான் ஏறிவந்த பெரியதேரினை அம்முல்லைக்கொடி படரும்படி அதன் அருகில் நிறுத்தி விட்டுச்சென்றதை,*

*"------பூத்தலைஅறாஅப்புனைக்கொடிமுல்லை*
*நாத்தழும்புஇருப்பப்பாடாதாயினும்*
*கறங்குமணிநெடுந்தேர்கொள்கஎனக்கொடுத்த*
*பரந்துஓங்குசிறப்பின்பாரி" ( புறம்.200)*

*என்றும்,ஊர் அனைத்தும் இரவலர்க்கு வழங்கி உயர்ந்தவன்.அணியோடும் தான்ஊர்ந்து வந்த தேரை முல்லைக்கு வழங்கிய பறம்புமலை கோமான் என்றும் சிறப்பித்ததை,*

*"ஊருடன்இரவலர்க்குஅருளித்தேருடன்*
*முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை*
*படுமணி யானைப் பறம்பின் கோமான்*

நெடுமாப் பாரி" (புறம்.201)

இப்பாடல் வரிகள் வழி அறிய முடிகின்றது.பறம்புநாடு முந்நூறு ஊர்களை உடையது. முந்நூறு ஊர்களையும் இரவலர்களுக்குத் தானம் கொடுத்ததை,

"முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு
முந்நூறு ஊரும்பரிசிலர் பெற்றனர்." ( புறம்.110)

இப்பாடல் அடிகள் பகர்கின்றன. பாரியின் கொடைத்தன்மையினைக் கண்டபுலவர்கள் பாரிக்குநிகர் பாரியே என்றனர். விறலி, பாரி வள்ளலைப்பாடி வந்தால் பறம்பு மலையைப் பெறுவது எளிதாகும் எனக் கபிலர் ( புறம்.111) குறிப்பிடுகிறார் .

கடைவள்ளல் எழுவரில் காரி என்பவன் ஒருவன். அவன் சிறந்த குதிரை வீரன். சங்க இலக்கியத்தில் மலையமான் திருமுடிக்காரி எனக்குறிப்பிடும் காரியை,

"கடல் கொளப் படாது உடலுநர் ஊக்கார்
சுழல்புனை திருந்தடிக் காரி நின்னாடே
மூவருள் ஒருவன் துப்பாகியர் என
ஏத்தினர் தருஉங் கூழே நும்குடி" (புறம் .122)

எனும் பாடல் காரியே உன் நாட்டை அந்தணர் பரிசிலாகப் பெற்றுவிட்டனர். மூவேந்திடமிருந்து வந்த உன் பொருளை எல்லாம் பரிசிலர் பெற்று விட்டனர் என அவனது கொடைச்சிறப்பினைக் கபிலர் பாடியுள்ளார். காரியை புலவர் கபிலர் காணச்சென்ற போது,பரிசிலர் தம் வரிசையறிந்து ஈதலாகிய ஈகையறத்தினை கைவிட்டு வரிசையறியாது ஈதல் வேண்டுமென அறிவுறுத்தியதை,

"ஒருதிசை ஒருவனை உள்ளி நால்திசை
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே ; பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அது நற்கு அறிந்தனை ஆயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே." (புறம்.121)

என்னும் பாடலடிகளால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஈகை கொடுப்பதனை மழையோடு ஒப்பிட்டு உரைப்பது பண்டைத்தமிழரின் மரபாகும். வரையாது கொடுக்கும் மழையினைப் போல வள்ளல்கள் அளவின்றி பரிசுகளை வழங்கினார்கள்.மழையானது நன்செய் , புன்செய் நிலம் என்னும் வேறுபாடு இல்லாமல் பெய்து வறுமையினை நீக்குவது போல் வள்ளல்கள் புலவர்களைப் புலமையுடையோர்,புலமை இல்லாதவர் என்ற வேறுபாடுன்றி மாரியைப் போல வழங்க வேண்டுமென்ற மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடண்திணை வழிப் பாடியுள்ள பாடல்,

"நாட்கள் உண்டு, நாள் மகிழ் மகிழின்,
யார்க்கும் எளிதே. தேர் ஈதல்லே
தொலையா நல்இசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழை அணி நெடுந்தேர்
பயன் கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே ( புறம்.123)

வானம் நாணுகின்ற அளவிற்கு வரையாது கொடுக்கின்ற தன்மையினை இப்பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன.

ஆய் அண்டிரன் என்னும் வள்ளல் இரவலர்க்கு அளித்த யானையின் தொகை, வானத்தில் சிறுதும் இடம் இல்லாமல் தோன்றும் நட்சத்திரங்களை விடப் பெரியது (புறம்.129)என்கிறார் ஏணிச்சேரி முடமோசியார். உன்னையும் உன்மலைகளையும் பாடிவரும் பரிசிலர்க்கு வழங்கிய யானையின் எண்ணிக்கை , உன் பகைவரான கொங்கர் உனக்கு புறமுதுகு காட்டி ஓடிய போது கைவிட்டுச் சென்ற வேல்களைவிட அதிமானது எனப் புறப்பாடல் ( புறம். 130) குறிப்பிடுகிது.ஆய் அண்டிரனின் வள்ளண்மையைப் புகழும்போது

"கலவமஞ்ஞையின காண்வர இயலி
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே" ( புறம்.133)

*எனும் பாடலடிகள், ஆய் அண்டிரனின் நல்ல புகழைக் கேட்டு , மேகம் வரையாது பெய்வது போல ஆய் அண்டிரன் வரையாது வழங்குவான் என விருப்பமுற்று இருந்தாள் என்பதை வெளிப்படுத்துகின்றன.*

*"இம்மை செய்தது மறுமைக்கு ஆம்எனும்*
*அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்*
*பிறரும் சான்றோர் சென்ற நெறிஎன*
*ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே"( புறம். 134)*

*ஆய் அண்டிரனின் கைவண்மை மறுமை நோக்கிச் செய்யப்பட்ட அறமன்று என்றும் அப்படி மறுமை நோக்கிச் செய்யப்படும் ஈகை அறம் அறத்தை விலைகூறி விற்கும் வணிகத்தை ஒத்தது என்றும் முடமோசியார் பாடுகிறார்.ஆய் அண்டிரனே யான் உன்னைக் காணவந்தது ,உன்னிடம் பரிசில் பெறுவதற்கன்று , உன்புகழை எண்ணி உன்னைக் காண வந்தேன்.பாணர் முதலியார் உன்னுடைய செல்வங்களை உரிமையால் எடுத்துக் கொள்வாரயின், அவற்றையெல்லாம் நீ திரும்ப எடுத்துக் கொள்ள மாட்டாய் . அத்தகைய மனமுடையவன் நீ .ஆகையினால் நீ வாழும்நாட்கள் முழுவதும் புகழுடனே வாழ்க என வாழ்த்துவதற்கு வந்தேன் எனப் புறப்பாடல் சான்று பகிர்கின்றது.*

*முதிர மலையின் தலைவன் குமணன், பெருந்தலைச் சாத்தனாரின் வறுமை நிலைகண்டு தன் தலையினைக் கொடுக்கத் துணிந்த தன்மை ஈதலறத்தின் மேன்மையினை இப்பாடல் குறிக்கிறது.*

*"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்*
*பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழநின்*
*நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்*
*இன்னார்க்கு என்னாது என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!( புறம்.163)*

*குமணவள்ளல் தந்த இந்த வளங்களை எல்லாம், கொடு, கொடு, எல்லோர்க்கும் கொடு, உற்றார் உறவினர்களுக்கும் நம்முடைய வறுமைக்காலத்தில் நமக்குத் தந்து உதவியவர்களுக்கும் கொடு. யாருக்குக் கொடுப்பது என்று யோசிக்க வேண்டாம். என்னைக் கேட்காமலேயே கொடு, இந்த வளங்களையெல்லாம் நாமே வைத்துக்கொண்டு வளமாக வாழலாம் என்றெல்லாம் நினைக்காமல் எல்லோர்க்கும் கொடு என்று மனமகிழ்ச்சியோடு மனைவிக்கு அனுமதி வழங்குகின்றார் பெருஞ்சித்திரனார்.*

*"கறங்கு மிசை அருவிய பிறங்கு மலை நள்ளி! நின்*

*அசைவு இல் நோன் தாள் நசை வளன் ஏத்தி,*

*நாள்தொறும் நன் கலம் களிற்றொடு கொணர்ந்து,*

*கூடு விளங்கு வியல் நகர், பரிசில் முற்று அளிப்ப;*

*பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி,*

*செய்யா கூறிக் கிளத்தல்*

*எய்யாதாகின்று, எம் சிறு செந் நாவே.( புறம் .148)*

*எனும் பாடலடிகள் அருவியுடைய மலையினைப் பெற்றிருக்கும் நள்ளியே,நீ நாள்தோறும் நல்ல அணிகளை ஆண்யானைகளுடன் கொண்டு வந்து உன்னை சூழ்ந்த பரிசிலர்க்கு அளிக்கின்றாய் என வன்பரணர் பாடியுள்ளார்.*

*"நள்ளி! வாழியோ; நள்ளி! நள்ளென்*
*மாலை மருதம் பண்ணி, காலை*
*கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி,*
*வரவு எமர் மறந்தனர் அது நீ*
*புரவுக் கடன் பூண்ட வண்மையானே" ( புறம்.149)*

*எனும் பாடல், பாணர்கள் வேண்டுவன கொடுத்துப் பாதுகாப்பு அளிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ளதால் , பாணர்கள் தங்களின் இசைமரபினை மறந்தனர் என வன்பரணர் குறிப்பிடுகிறார். நள்ளியின் புகழ் விரும்பா வள்ளண்மையை,*

*“.. .. .. .. .. .. வீறுசால் நன்கலம்*
*பிறிதுஒன்று இல்லை, காட்டு நாட்டேம்என*
*மார்பிற் பூண்ட வயங்குகாழ் ஆரம்*
*மடைசெறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்*
*எந்நாடோ என நாடும் சொல்லான்*
*யாரீரோ எனப் பேரும் சொல்லான் ” (புறம்.150)*

*தம் ஊரின் பெயரைக் கேட்டும் சொல்லாமல், உணவும் பரிசிலும் வழங்கிச் சென்ற நள்ளியின் செயலை என்னும் பாடலடிகளால் அறிய முடிகின்றது.*

*அதியமான், ஔவைக்கு நீண்டகாலம் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் நெல்லிக்கனியைக் கொடுத்து ஈதலறத்தினைப் போற்றினான். அதியமான் நெடுமான் அஞ்சியைக் குறித்து ஔவையார் பாடிய பாடலின்*

*”அமிழ்தன மரபின் ஊன்துவை அடிசில்*
*வெள்ளி வெண்கலத்து ஊட்டல் அன்றி*
*முன்னூர்ப் பொதியில் சேர்ந்த மென்னடை*
*இரும்பேர் ஒக்கல் பெரும்புலம்பு அகற்ற*
*அகடுநனை வேங்கை வீகண் டன்ன*
*பகடுதரு செந்நெல் போரொடு நல்கி*
*கொண்டி பெறுக என்றானே "(புறம்.390)*

*எனும் பாடல் மறுமை இன்பத்தினை நினைக்காமல் வறியவரின் வறுமையினை நீக்க வேண்டுமென்ற என்ற நோக்கத்தோடு செய்கின்ற அறத்தினை, என்னும் பாடலடிகளால் அறிய முடிகின்றது பொருநனைக் கண்டவுடன், வெள்ளிக் கலத்தில் இட்டு அதனை உண்பித்ததோடு அவன்சுற்றத்தாரது வறுமைத் துயரத்தையும் போக்க நெற்குவியலையும் கொடுத்தான் என்று ஔவையார் அதியமானைப் பாடுகின்றார். முன்பு கொடுத்தோமே அதனால் இல்லை என்ற எண்ணம் இல்லாமல் ஈதலறத்தினை வள்ளல்கள் கடைபிடித்தனர். ஒரு நாள், இருநாள், பலநாள் அல்லது நாள்தோறும் பலரோடு சென்றாலும் முதல் நாளில் எத்தகு விருப்பத்தோடு ஈதலறத்தினை மேற்கொண்டது போல் அதியமான் அஞ்சி வாரி வாரி வழங்கினான் என்பதை,*

*”ஒருநாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்;*
*பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்*
*தலைநாள் போன்ற விரும்பினன் மாதோ –*
*இழைஅணி யானை இயல்தேர் அஞ்சி*
*அதியமான்; பரிசில் பெறூஉம் காலம்*
*நீட்டினும் நீட்டாது ஆயினும் யானைதன்*
*கோட்டுஇடை வைத்த கவளம் போலக் ” ( புறம் .101)*

*எனும் பாடலின் மூலம் அதியமான் அறம் செய்து வாழ்ந்ததை அறிய முடிகிறது.இன்முகத்தோடு ஈதலறத்தினை வள்ளல்கள் மேற்கொண்டனர். புலவர்கள், பாணர், பாடினி,விறலி ஆகியோர் மன்னனின் அவையில் உரிமையோடு சென்று பரிசில் பெற்று மகிழ்நதனர்.*

*வல்வில் ஓரி என்றழைக்கப்படும் ஆதன் ஓரி கொல்லிமலைக்கும் தலைவன் ஆவான்.இவனது ஈதலறத்தைப் பரணர் பாடியுள்ளார்.*

*”------------------------ வேட்டத்தில்*
*தான் உயிர் செகுத்த மான்நிணப் புழுக்கோடு*
*ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கித்*
*தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்*
*பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்ம் எனச்*
*சுரத்துஇடை நல்கி யோனே” ( புறம்.152)*

*எனும் பாடல் வேட்டையில் தான் அடைந்த மானின் நிணத்துடன் கூடிய தசையினை, பசு நெய்யை உருக்கியதைப் போன்ற மதுவைத் தந்து, தன் மலையில் பிறந்த குற்றமற்ற நல்ல பொன்னைப் பல மணிக் கூட்டத்துடன் கலந்து கொடுத்தான் எனப் புறப்பாடல்*

சுட்டுகிறது.குவளைப் பூவினை வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையையும் மற்ற அணிகளையும் இரவலர்க்குக் கொடுத்தான். ஈ என்று இரத்தலும் ஈயேன் என்று மறுத்தலும் இழிவாகும்.இரப்பவரின் உள்ளக் குறிப்பினை அறிந்து கொள்க எனக் கொடுப்பது உயர்வு என்று சொல்லி.நீவிரும்பியதை, ''கருவி வானம் போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே'' (புறம்.204) என ஓரியை கழைதின் யானையார் வாழ்த்துகிறார்.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் பகிர்ந்துண்ணல், கொடை, பரிசில், உணவிடல் என்ற பலநிலைகளில் சமூக வழக்கிலிருந்த ஈகை வறுமையுற்றார்க்கு அவர் வேண்டுவன ஈதல் ,ஈகை எனவும், தம்மை நாடி வரும் இரவலர்க்கும், பரிசிலர்க்கும் அவரைப் போற்றி வரையாது கொடுத்தல் கொடை எனவும் பெறும். அரசனது அதிகாரவரன்முறை வரையறுக்கப்பட்ட அரசனது அறங்கள் வன்சொல்லும் இன்சொல்லும் கலந்தே இருந்தன. இயற்கை நெறிக்காலக் கருத்துக்களைக் கூறும் சங்கப்பாடல்களில் புறநானூறு வாழ்க்கையைச் சீர்திருத்தி, நீதியறங்கள் கற்பித்து, இயற்கை நெறியை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையை முழுமைபெற எடுத்துக்கூறுகிறது. பழந்தமிழ் பண்பாட்டில் இருந்த அறங்களைப் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் தெளிவாக எடுத்துரைக்கிறது. புறநானூற்றில் அறக்கருத்துகள் அதிகம் பேசப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களுக்கும் மற்றும் அதன் தொடர்ச்சியாக, தமிழிலக்கியத்தில் தோற்றம் பெற்ற இலக்கிய வகைமைகளுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. அறவழியில் வாழும் வாழ்க்கையின் சிறப்பினை அனைவருக்கும் உணர்த்த வேண்டும். அற வாழ்க்கையே வையத்துள் வாழ்வாங்கும் வாழ்க்கையாகும். பொது வாழ்க்கையிலும் தனி வாழ்விலும் அறக்கோட்பாட்டிற்குரிய உரிய இடத்தை மீண்டும் பெற்றுத் தரும் கடமையை உருவாக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. ஜ. சிவகுமார்., செவ்வியல் இலக்கிய ஆய்வுகள், நியுசெஞ்சுரிக் புத்தக நிலையம்,அம்பத்தூர், சென்னை-98, பதிப்பு 2011
2. முனைவர் கா.ஆபத்துக்காத்தபிள்ளை., புறநானூற்றில் அறம், வானதிப் பதிப்பகம், தி.நகர், சென்னை- 17, பதிப்பு- 2019.
3. ராஜ் கௌதமன் ., தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், நியுசெஞ்சுரிக் புத்தக நிலையம்,அம்பத்தூர், சென்னை-98, பதிப்பு -20018
4. ராஜ் கௌதமன் ., தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், நியுசெஞ்சுரிக் புத்தக நிலையம்,அம்பத்தூர், சென்னை-98, பதிப்பு -20018
5. முனைவர். சி.இராச., புறநானூறு அகராதி , பாவை ப்ப்ளிகேஷன்ஸ் ,இராயப்பேட்டை, சென்னை-14 , பதிப்பு - 2010.
6. புறநானூறு மூலமும் உரையும்- நியுசெஞ்சுரிக் புத்தக நிலையம்,அம்பத்தூர், சென்னை-98, பதிப்பு- 2007.

********* ********* ********** ********* ********* ********** ********** **********